**OS.NO: 117/2024**

**PW :1 (சதாசிவம் த/பெ.துக்காராம்)**

நாள் : 07.08.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

இந்த வழக்கில் 2ம் வாதி எனது தந்தை, 3ம் வாதி எனது சகோதரி. 1ம் பிரிதிவாதி எனது பெரியம்மா 2 முதல் 4 வரை பிரிதிவாதிகள் எனது பெரியம்மா பிள்ளைகள். என் பெரியப்பாவின் பெயர் எழுமலை பிள்ளை. தாவா சொத்தினுடைய சர்வே எண்.687/1. அதன் மொத்த விஸ்திரனம் 4 ஏக்கர் 24 சென்ட். அதில் பாதி பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பாதி பாகம் எங்களுடையது என்று விளம்புகை கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் 4.24 சென்டில் பாதி பாகத்தில் 2 ஏக்கர் 12 சென்டை வெங்காடபுரம் ரோட்டிற்கு வடக்கு, இராமன் இலட்சுமணன் நிலத்திற்கு தெற்கு, ஏழுமலையின் பாகத்திற்கு கிழக்கு, மலரினுடைய நிலத்திற்கு மேற்கு உள்ள 2 ஏக்கர் 12 சென்டை தான் உரிமை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் 1981 ல் பிறந்தேன். என் தந்தைக்கும் எனது பெரியப்பாவுக்குமிடைய 1980 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை ஏற்பட்டது அதற்கு எந்தவிதமான ஆவணமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாய்ச்சொல் மூலுமாக ஏற்பட்ட பாகத்திற்கு ஆவணம் உள்ளது. அந்த ஆவணத்தை இந்த வழக்கில தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய பாகத்தை என்னுடைய பெரியப்பா கிரையம் வாங்கியதை தான் நான் கூறுகின்ற மேற்படி ஆவணமாகும். அந்த ஆவணம் தான் வாசாஆ.2 என்று சொன்னால் சரிதான். வாசா.2 ன் முலமாக எனது அக்காவையும் கட்டுப்படுத்தி எனது பெரியப்பாவிற்கு எனது தந்தை சொத்தை கிரையம்

செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்தை எனக்காகவும் எனது அக்காவிற்காகவும் எனது தந்தை கார்டியன் என்ற அடிப்படையில் எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணத்தை எனக்ககாவும் எனது தந்தைக்காவும் தான் எழுதி கொடுத்தாரே தவிர எனது அக்காவிற்காக எழுதிக் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். வாசாஆ.2–ல் வாய்ச் சொல் பாகம் என்ற வாசகம் எதுவும் அதில் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மாறாக அதில் எனது பிதுரார்ஜீ மற்றும் எனது தந்தையின் அனுபவ சொத்து தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்தில் சக்குபந்தியில் எனது பெரியப்பாவின் அனுபவத்தில் உள்ள சொத்து என்பதற்கு பதிலாக எழுமலையினுடைய சொத்து என்று குறிப்பிட்டுள்ளதால் அதை சாதகமாக பயன்படுத்தி வாய்ச்சொல் பாகம் ஏற்பட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி பாகப்பிரிவினை வேண்டி OS.NO.114/2024 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். வாசாஆ.1 எனது பெரியப்பா பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான் அது கூட்டு குடும்ப வருமானத்தை கொண்டு பெரியப்பா பெயரில் வாங்கியதாக சாட்சி கூறினார். எனது அப்பா பேசும் நிலையில் தான் உள்ளார் எனது தந்தையை கேட்டால் புரிந்து கொண்டு பதில் சொல்லும் நிலையில் உள்ளாரா என்றால் அவருக்கு காது கேட்காது. எனது அம்மா இறந்து விட்டார். அயோத்தி பிள்ளைக்கு 2 மகன்கள் தான் என்று சொன்னால் சரிதான். வாசாஆ.1 தேதியில் மேற்படி அயோத்தி பிள்ளை தபால் துறையில வேலை செய்கிறாரா என்று கூறினேனா என்றால் ஆமாம். அதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாங்கி வைத்துள்ளேன் தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எனது பெரியப்பாவுக்கு 1972ல் திருமணம் ஆனது என்று கூறுகின்ற விவரத்தை நான் மறுக்கிறேனா என்றால் அதற்கு

முன்பாகவே எனது பெரியப்பாவிற்கு திருமணம் ஆகிவிட்டது. எனது தந்தைக்கு தான் 1972–ல் திருமணம் ஆனது. திருமணம் ஆனவுடன் எனது தந்தையும் எனது பெரியப்பாவும் தனிக்குடித்தனம் சென்று விட்டார்களா என்றால் இல்லை. நான் கூறுகின்ற விவரத்தை நிருபிக்க சாட்சி யாராவது உள்ளார்களா என்றால் எனது தந்தை தான் உள்ளார். எனது தந்தைக்கு திருமணம் ஆன 2, 3 மாதங்களிலேயே தனிக்குடித்தனம் சென்று விட்டார்கள் என்றும் நான் கூறிகின்ற விவரம் தவறு என்று சொன்னால் சரியல்ல. 1980ல் தாவா சொத்து மற்றும் இதர சொத்துகளும் பாகப்பிரிவினை ஆகியவிட்டது என்று தான் நான் கூறுகிறேன். எனது தந்தையின் பெயர் பிதுராஜித சொத்துகள் பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்று கூறும் பட்சத்தில் தனித்தனி பட்டா உள்ளதா என்றால் ஒரு சில சொத்துக்களுக்கு உள்ளது. குறைந்த சொத்துக்களுக்கு தான் தனித்தனி பட்டாக்கள் உள்ளது என்றும் பெரும்பாலான சொத்துகளுக்கு கூட்டாக உள்ளது என்றால் ஒரு பம்பு செட் சுற்றியுள்ள சொத்துக்களுக்கு தனித்தனி பட்டாக்கள் உள்ளது என்றும் மற்றொரு பம்பு செட்டை சுற்றியுள்ள சொத்துக்களுக்கு கூட்டு பட்டா உள்ளது. நான் கூறுகின்ற பட்டாக்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். யார் முன்னிலையில் பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் அதை பற்றி எனது அப்பாவிற்கு தான் தெரியும். எனது தந்தையின் வயதை ஒத்த பேசக்கூடிய வேறு யாரேனும் உள்ளார்களா என்றால் இல்லை.

**(ஒம்./–) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**